அருள்மிகு

மாசாணியம்மன் திருக்கோயில்

ஆனைமலை-642 104



1214

# திருத்தல வரலாறு

மாண்புமிகு முதலமைச்சர்

**டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி**

அவர்கள்

**மாண்புமிகு புலவர் செங்குட்டுவன்**

அவர்கள்

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

திரு. வ. ராமதாஸ் I.A.S. அவர்கள்

ஆணையர்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

திரு. K. K. இராஜா M.A.B.L. அவர்கள்

இணை ஆணையர்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, கோவை.

# அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்

ஆனைமலை,

ஆசிரியர் :

திரு. அழ. முத்துப்பழனியப்பன், M.A,

திருக்கோயில் வெளியீடு

முதல் பதிப்பு : 1994 — 5000 பிரதிகள்

இரண்டாம் பதிப்பு : 1996 — 5000 பிரதிகள்

விலை ரூ. 4—00

---

உரிமை : திருக்கோயிலுக்கே.

எங்கள் வணக்கங்கள்.

''ஏதோ ஒன்றைப் பெற்றோம், அதன் பிறகு வேறு எதுவுமே தேவைப்படாது என்றோ ஏதோ ஒரு பொருளை அடைந்தபிறகு நமக்கு ஒரு குறையுமிராது எல்லாம் இன்பம்தான் என்று சொல்லக்கூடிய ஒன்று உலகத்தில் இல்லவேஇல்லை'' என்பதனை உணரத் தொடங்கிய பின் மனிதன் ''தன்னை யார்'' என அறிந்துகொள்ள விழைகிறான்.

இவன் மனதை செம்மையாக்கவே சமயம் வேதம், ஆலயம், வழிபாடு, விரதம் முதலியன வைக்கப்பட்டன. இவைகளை முறையே கைகொள்ளும் மனிதன் மனதின் தன்மையைப் படிப்படியாக அறிந்துகொள்கிறான்.

''இருந்தாய் இங்கு, கண்ட இடத்து ஏகாநின்றாய், அவ்விடத்தும் பொருந்தாய், மீண்டும் புகுவாய், பின் போவாய், வருவாய், புகழ் தணிகை மருந்தாய் நின்ற குகனடியே வழுத்தாய், எனையும் வலிக்கின்றாய். திருந்தாய் நெஞ்சே நின் செயலைச் செப்ப எனக்கு திடுக்கிடுமே!'' என, தன் நெஞ்சே தன்னை அறிவித்த பின் தெய்வத்தை சார்ந்து விடுகிறான்.

தெய்வத்தை சார்ந்த மாந்தர்களும் தங்கள் மன நிலையில் மாறுபடுகின்றனர். அவரவர்களது இயல் பிற்கேற்ப அவரவரையும் ஆட்கொண்டு அருளுவதற்காக அன்னை பராசக்தி ஆங்காங்கு பலபல பேர்களுடனும் உருவங்களுடனும் ஆவிர்பவித்துள்ளாள்.

தாயைத் தெய்வமாகக் கருதி வழிபடும் சக்தி வழிபாடாகிய 'சாக்தம்' சங்க காலத்திலிருந்து நிலவி

வருகிறது. கொற்றவை வழிபாடு, கண்ணகி வழிபாடு மாரியம்மன் வழிபாடு என்பதெல்லாம் தமிழர் கண்ட சக்தி வழிபாட்டு நெறிகளாகும்.

பொதுவாக சக்தி பீடங்கள் 64 என்பர் இதனை தவிர்த்து ஆங்காங்கே காவல் தெய்வமாக, வனதேவதையாக, மக்கள் வழிபடும் தெய்வமாக அன்னை சக்தியின் ஆலயங்கள் தமிழகத்தில் பல உள்ளன. 'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று சொல்லும்' என்ற பழமொழியை இத்தகைய தேவதைகளே உறுதி செய்கின்றன. இத்தகைய நீதிதெய்வங்களில் ஒன்றே அருள்மிகு மாசாணியம்மன்.

இத்தல வரலாற்றை சிறப்புற தொகுத்து எழுதி தந்த திரு. அழ. முத்துப்பழனியப்பன் M.A., (செயல் அலுவலர், அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில் அவிநாசி) அவர்களுக்கு எங்களது இதயங் கனிந்த நன்றியும், வாழ்த்தும்.

அவளருளாளே அவள் தாள் வணங்கி தங்களையும் வணங்க அழைக்கிறோம்.

அன்புடன்

**திருக்கோயில் நிர்வாகிகள்**

# அருள்மிகு மாசாணியம்மன் கோயில்

## ஆனைமலை.

## திருத்தல வரலாறு.

**கொங்கு நாடு :**

தமிழகத்தின் ஏனைய பிரிவுகளைப் போல கொங்கு நாடும் மிகுந்த வரலாற்றுச் சிறப்புடையது. கொங்குநாடு தமிழகத்தின் மேற்குப் பகுதியாக விளங்குவது. இதனுடைய எல்லைகளைப் பற்றிப் பழம் பாடல் ஒன்று இவ்வாறு சொல்கிறது.

''வடக்குத் தலை மலையாம் வைகாவூர் தெற்கு
குடக்கு வெள்ளிப் பொருப்புக்குன்று—கிழக்கு
குழித்தண்டலை சூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண்டலை அளவும் கொங்கு''

இதன்படி இதன் வடக்கு எல்லை தலைமலை தெற்கு எல்லை வைகாவூர் என்று வழங்கப்படும் பழனி. மேற்கு எல்லை வெள்ளிமலை (வெள்ளிங்கிரி) கிழக்கு எல்லை குளித்தலை ஆகும்.

இன்றைக்கும் காங்கயத்திற்கு அடுத்த படியூரில் கிடைக்கும் வண்ணக் கற்களுக்காக, கிறிஸ்து சகாப் தத்தின் முன்னரே உரோமானியர்கள் கொங்கு நாட் டில் வலம் வந்தனர். கொங்கு நாடு முழுவதும் கிடைக்கும் பழமையான அவர்களது காசுகளாலும், ஏனையவற்றாலும் இந்த உண்மை விளங்குகிறது. சேர நாட்டில் இருந்து மூன்று பெருவழிகள் கொங்கு நாட்டின் வழியாகச் சென்றன. ஒருவழி பேரூர்,

அவிநாசி, ஈரோடு, சேலம் வழியாக சதுரங்கப்பட்டினத்தை அடைந்தது. மற்றொருவழி பேரூர், வெள்ளலூர், சூலூர், பல்லடம், கரூர், திருச்சி வழியாக பூம்புகார் சென்றது. மூன்றாவது வழி ஆனைமலை, வடபூதநத்தம், கொழுமம், சின்னக்கலையமுத்தூர், பழனி, திண்டுக்கல், மதுரை வழியாக இராமேஸ்வரம் வரைசென்றது. இந்தவழிகள் இன்றும் சிறந்து விளங்குகின்றன.

கொங்கு நாடு பழங்காலந் தொட்டு வரலாற்றுச் செய்திகளைப் பெற்றுள்ளது. புதிய கற்காலம், பெருங்கற்காலம், சங்ககாலம், பல்லவர்காலம், பாண்டியர் காலம், சோழர்காலம், போசனர் காலம், விஜய நகர காலம், நாயக்கர் காலம், வெள்ளையர் காலம் எனப் பல கால கட்டங்களைப் பெற்றுள்ளது. காலந் தோறும் ஆட்சி மாறினாலும் மக்களின் வாழ்க்கை சலனமற்றிருந்தது. கொங்கு நாட்டில் கொங்கர், ஆவியர், மழவர், அண்டர், வேட்டுவர், குறும்பர் போன்ற பழங்குடிகள் இருந்துள்ளனர். கல்வெட்டுக்களில் வேட்டுவர், பூலுவர், ஆயர், வன்னியர் போன்ற குடிகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நன்னனூர் ஆனைமலை :**

பழங்காலத்தில் கொங்கு நாடு 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. கொங்கு நாட்டின் தென் பகுதியான ஆனைமலை நாடும் அவற்றுள் ஒன்று. ஆனைமலை சங்க காலந்தொட்டு சிறந்து விளங்கும் புண்ணியபூமி. சங்ககால நன்னன் வாழ்ந்த பகுதிஇதுவே கல்வெட்டுக்கள் இவ்வூரை 'நன்னனூர்' என்றே

சுட்டுகின்றன. இம்மலையில் யானைகள் அதிகம் இருந்ததால் இப்பெயர் பெற்றது. எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில், பல்யானைச் செல்கெழு குட்டுவனை உம்பற்காட்டைத் தன் வயப் படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உம்பற் காடு இப்பகுதியாகும்.

ஆனைமலையின் அடிவாரத்தில் அமையப் பெற்ற ஊருக்கும் அதே பெயர் ஏற்பட்டது. சோழன் பூர்வபட்டயம் என்ற நூல் 'ஆனை என்கிற இருளன் பதி' என்று இவ்விடத்தைச் சுட்டுகின்றது. ஆனை மலையில் ஆழியாற்றங் கரையில் அருள்மிகு சோமேசுவரர் திருக்கோயிலும், ஊரின் நடுவில் அருள்மிகு காசிவிசுவநாதர் கோயிலும் உள்ளன. ஆழியாற்றின் கிளை நதியான உப்பாற்றங் கரையில் அமைந்துள் ளது அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்.

**பழைய வரலாறு :**

இது சங்க காலத்தில் உம்பற் காடான ஆனை மலையில் நடந்த கதை. இந்தப் பகுதியை நன்னன் என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். இவன் ஆழியாற்றங் கரையில் இருந்த தன் அரசு தோட்டத் தில் ஒரு மாமரத்தை வளர்த்து வந்தான். அம்மரத் தின் கிளைகளையோ, காய்களையோ, கனிகளை யோ யாரும் பயன்படுத்தக்கூடாது என்றும் ஆணை யிட்டிருந்தான்.

ஒருநாள், ஆழியாற்றில், தன் ஒத்த இளவயது பெண்களோடு நீராட வந்த இளம்பெண் ஒருத்தி அந்த மாமரத்தில் இருந்து தானாகவே ஆற்றில் உதிர்ந்து வந்த மாங்கனியை உண்டுவிட்டாள்.

இது தெரிந்த நன்னன், அவளைக் கொலை செய்து விடும்படி உத்திரவிட்டான். அவளது தந்தை அந்தப் பெண்ணின் எடையளவு தங்கத்தால் செய்த பாவை ஒன்றையும், எண்பத்தொரு களிற்றையும் (ஆண் யானைகள்) அந்தப் பெண் அறியாது செய்த தவற்றுக்காகத் தண்டம் இழைப்பதாகக் கூறியும் ஏற்கவில்லை. அந்தப் பெண்ணைக் கொலை செய்து விட்டான்.

கொலை செய்யப்பட்ட அந்தப் பெண்ணை, மயானத்தில் சமாதிப்படுத்தி அதன் மீது அந்தப் பெண் போன்ற ஓர் உருவத்தை, மயான மண்ணில் அமைத்து வழிபட்டார்கள். மயானத்தில் சயனித்த நிலையில் இருந்த அப்பெண் நாளடைவில் 'மாசாணி' என அழைக்கப்பட்டாள்.

பெண்கொலை புரிந்த அந்த நன்னனை, கொங் கிளங்கோசர்கள் படையெடுத்து அவனை தண்டித்து அவனது காவல் மரமான மாமரத்தையும் வெட்டி விட்டனர் என்பது பின்னால் நடந்த வரலாறு.

தமிழ்ப் புலவர்கள், பெண் கொலை புரிந்த அந்த நன்னர் மரபினரைக்கூட, பிற்காலத்தில் பாட மறுத்துவிட்டனர். இதைப்பற்றி சங்க இலக்கியங் களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''மண்ணிய சென்ற ஒண்ணுதல் அறிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிந்து ஒன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன்''

— குறுந்தொகை 292

பெயர் தெரியாத இந்த ஆனைமலைப் பெண் பின்னர் கொங்குநாடு முழுவதும் வழிபடும் தெய்வம் ஆனாள். பக்தர்கள் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இங்கே வந்து இந்த மயான தேவதையை வழிபடுவது வழக்கமாயிற்று.

தமிழர்களின் முதல் மாதமான தை மாதத்தில் தைப்பொங்கல் முடிந்த பின் அமாவாசை தொடங்கி அடுத்த 17-ஆம் நாள், நெருப்பினால் குண்டம் வளர்த்து அதில் நடந்து, அந்தப் பெண்ணுக்குச் செய்த கொடுமைக்காகப் பரிகாரம் தேடினார்கள்.

ஆனைமலை ஊருக்கு மேல் 'பிங்கொனாம் பாறை' என்ற பெயருள்ள பாறை ஒன்று உள்ளது. இதுவே'அந்தப்பெண்ணைக்கொன்ற பாறை' என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்,

இவ்வூரில், கிருஸ்துவுக்கு முந்தைய 40 உரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. ஆகவே இந்த ஊர் நீண்ட வரலாற்றை உடையது என்பதில் ஐயமில்லை.

## ஸ்ரீ ராமர் தொடர்பு

இத்தகைய சிறப்புப் பொருந்திய ஆனைமலைப் பெண் தெய்வத்தை ஸ்ரீராமர் பூஜை செய்து வணங்கி அருள் பெற்றதாக ஒரு கதை நிலவுகிறது. இதன்படி ஸ்ரீ ராமன். 'பொய் மானைத் தேடிப் புறப்பட்டதால் தன் பெண் மானான சீதையை ராவணன் கவர்ந்து செல்லக்காரணமான பின், சீதையை தேடி புறப்பட்டார். அவ்வாறு தேடிவந்தபோது; உப்பாற்றின் கரையில் இருந்த மயானத்தில் ஓர் அசாதாரணமான அற்புத சக்தி விளங்குவதை அறிந்தார். அங்கிருந்த

மேடைமீது அமர்ந்து தியானித்தார். எல்லாம் வல்ல பெருங்கருணை பெருமாட்டியான அம்பிகை பராசக்தி அங்கே அருட்கோலம் பூண்டு நிலவுவதை அறிந்தார் அந்த மேடைமீது அங்கிருந்த மயான மண்ணைக் கொண்டு, படுத்த கோலத்தில் மண் உருவம் செய்து வழிபட்டார், அருள் பெற்றார். அதன்பின் இலங்கை தேடிச் சென்றார் என்பது அக்கதை.

எவ்வாறாயினும், கொங்கு நாட்டு மக்களின் தனிப்பெரும் காவல் தெய்வம் ஆனைமலை மாசாணி அம்மன் என்பதில் ஐயமில்லை.

எங்கும் நிறைந்த பரம்பொருளாய், எல்லாம் நிறைந்த பெருஞ்சுடராய், தம்மை வழிபடும் மாந்தர்க்கு தக்க வரங்கள் பலவும் தந்து தன் நிலையில் வைத்து பாதுகாக்கும் தன்னேரில்லாத் தாய் இவளே யாம்.

ஜாதி பேதங்கள் ஏதுமின்றி, மத மாச்சரியங்கள் சிறிதும் இன்றி, இஸ்லாம், கிறித்துவம் முதலிய எல்லா மதத் தலைவரும் இங்கே வந்து வணங்கி நிற்கும் காட்சி அற்புதக் காட்சியாகும்.

அம்மைக்குரிய நாட்களான செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும்,மாதந்தோறும் அமாவாசை நாளிலும், மேற்குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும். விசேச பூஜைகளுக்கும் நிறைந்த அளவில் மக்கள் கூடுகின்றனர். இவை தவிர ஆண்டுதோறும் தமிழ் வருடப்பிறப்பு, தீபாவளி, திருக்கார்த்திகை, மார்கழி தைப்பொங்கல், ஆடி வெள்ளிக்கிழமை, வினாயகர் சதுர்த்தி, நவராத்திரி முதலிய விசேஷ நாட்களிலும் பக்தர் கூட்டம் இங்கே அலைமோதுகிறது.

**மாசாணியம்மன் சிறப்பு:**

மாசாணியம்மனின் சிறப்புக் காரணம் மூலவுரு அமைப்பின் தனித்தன்மையே ஆகும். பொது வாக மற்ற எல்லாத் திருக்கோயில்களிலும் அம்பிகை யின் தோற்றம் நின்ற கோலத்தில் அல்லது அமர்ந்த கோலத்தில் இருக்கும்.

அந்தத் திருவுருவங்கள் சிற்ப சாஸ்திர முறைப் படி வடிக்கப்பட்டவை. ஆனால் மாசாணியின் தோற் றம் அத்தகையதல்ல. அவள் மயான தேவதையாக படுத்திருக்கும் கோலத்தில் உள்ளாள். இது வேறு எங்கும் காணக் கிடைக்காத காட்சியாகும். உப்பாற் றின் கரையில் சுமார் 17 அடி நீளத்தில் படுத்திருக் கும் கோலத்தில் உள்ளது அம்பிகையின் மூலஉரு.

ஆகவே இவளைப் பார்க்கின்ற, வணங்குகின்ற எவரும் பொய் சொல்ல முடியாது; வஞ்சகம் நினைக் கவும் இயலாது; அத்தகைய நீதி தேவதையாக இவள் உள்ளாள்.

பில்லி, சூன்யம், மந்திரம், ஏவல் போன்ற பெரும் பகைகளால் பாதிக்கப்பட்டவர்கள் வாரந் தோறும் தவறாது வந்து தரிசித்துப் பரிகாரம் பெறுகின்றனர்.

பிறரால் வஞ்சிக்கப்பட்டவர்களும், பகைவர் களாலும், கள்வர்களாலும் பாதிக்கப்பட்டவர்களும், தங்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றும், இழந்த பொருள் மீளவும் கிடைக்கவேண்டும் என்றும் வேண்டி மிளகாய் அரைத்து, இங்கே உள்ள ''நீதிக் கல்லில்'' பூசி விடுகிறார்கள். தங்கள் முறையீட்டில்

நீதி இருந்தால் தவறு செய்தோர் தண்டிக்கப்படுவார்கள் என்று நம்புகிறார்கள்.

குழந்தைப் பேறு இல்லாதவர்கள் அம்பிகையின் திருமுன்பு வந்து குறிப்பிட்ட வாரங்களுக்கு வேண்டி, அவர்கள் குழந்தைச் செல்வம் பெற்று, தாயும் சேயுமாக வந்து வழிபாட்டை நிறைவேற்றி செல்வது இக்கோயிலில் மற்றொரு வழக்கமான காட்சியாக உள்ளது.

இக்கோயிலில் உள்ள இன்னொரு சிறப்பம்சம், கறுப்புக் கயிறு அம்மனின் பிரசாதமாக வழங்கப்படுவதுதான். காசிக் கயிறுபோல, கறுப்புக் கயிறு அம்மனின் பாதத்தில் வைத்து வழிபட்டு பிரசாதமாக வழங்கப்படுகிறது. அக்கயிற்றை கையில் கட்டிக் கொண்டால் எவ்விதத்தீவினையும் வளராது. துன்பம் தீர்ந்து போகும் என்கிற நம்பிக்கை இப்பகுதிவாழ் மக்களுக்கு அதிகம் உண்டு.

## ஆண்டுத் திருவிழா—பூமிதி விழா

இத்திருக்கோயிலில் வருடாந்திர பிரமோற்சவம் குண்டம் திருவிழா. பொதுவாக குண்டம் திருவிழா கொங்கு நாட்டின் சிறப்பான திருவிழாக்களில் ஒன்று பண்ணாரி, பாரியூர், பெருமாநல்லூர் போன்ற பல ஊர்களிலும் குண்டம் திருவிழா சிறப்புடையது.

அதுபோலவே ஆனைமலை மாசாணியம்மன் குண்டம் திருவிழா சிறப்புடையது. குண்டம் திருவிழா கொங்கு நாட்டின் பழங்கால நினைவுகளில் ஒன்றாகும்.

புதிய கற்கால மக்கள் கால்நடைகள் மேய்த்து திரிந்தவர்கள் என்பதை வரலாறு சொல்கிறது. அதிகமான 'கோ'க்களை வைத்திருந்தவன் 'கோன்' ஆனான். ஆநிரைகளைச் சிறந்த முறையில் பராமரிக்கவும், பாதுகாக்கவும் செய்த அவனுடைய செய்கை 'கோன்மை' ஆயிற்று. ஆக்களைக் காக்க வைத்திருந்த கோலே நாளடைவில் மக்களை காக்கும் 'செங்கோல்' ஆயிற்று. அத்தகைய முல்லை நிலக் கோவலர்களின் எச்சங்கங்கள், தக்கணத்தில் பிக்னஹால், உட்னூர் ஆகிய இடங்களில் தொல் பொருள் அகழாய்வு செய்தபோது கிடைத்தன. கொங்கு நாட்டில் அத்தகைய செய்திகள் அகழாய்வில் இதுவரை கிடைத்தில என்றாலும் பூதிமேடு, பூதிக்காடு, பூதிக்குண்டல் என்று அழைக்கப்படும் இடங்கள் உள்ளன.

புதிய கற்கால கால்நடை மேய்ப்பவர்கள் தாங்கள் பட்டி போட்டு தங்கியிருக்கும் பகுதியில் கால்நடைகளின் சாணத்தைக் குவித்து வைப்பர். மேய்ச்சல் நிலம் வேண்டி வேறிடத்திற்குப் புறப்பட்டு செல்லுமுன் சாண மேட்டினை தீயிட்டுக் கொளுத்துவர். அவ்வாறு கொளுத்திய பின் அந்தத் தீயில் மக்களும், கால்நடைகளும் நடந்து செல்வர். தீயானது மக்களையும், மாக்களையும் நோயிலிருந்தும், கெட்ட ஆவிகளிடமிருந்தும் பாதுகாக்கும் சக்தி உடையது என்று அக்கால மனிதன் நம்பினான்.

ஆண்டுதோறும் தைத்திங்கள் அமாவாசை அன்று திருவிழாக் கொடியேற்றப்படுகிறது. கொடி ஏற்றிய 14ஆம் நாள் இரவு ஊர்வலமாக

மயானக் கரைக்குச் சென்று மயான மண்ணினால் அம்மனின் உருவச்சிலை செய்து அதற்கு சக்திபூஜை செய்யப்படுகின்றது. 15ஆம் நாள் கங்கணம் கட்டிய பின் திருக்கோயிலில் கும்பஸ்தாபனம் நடைபெறும். மயான பூஜையில் குண்டத்தில் இறங்கும் ஆண்களும் கும்பம் எடுத்துக் கொடுக்கும் பெண்களும் மிகுந்த ப ‌ ‌ ‌ கலந்து கொள்கிறார்கள்.

16ஆம் நாள் சித்திரத் தேர் வடம் பிடித்து நகரை வலம் வருவர். அன்று இரவு அக்கினிக் குண்டம் வளர்க்கப்படுகின்றது.

17ஆம் நாள் காலையில் பக்தர்கள் குண்டத்தில் இறங்குவார்கள்.

18ஆம் நாள் அம்மனுக்கு திருமஞ்சன நீராட்டு விழா நடைபெறும். அன்று இரவு மகா முனியப்பன் பூஜையுடன் குண்டம் திருவிழா நிறைவுறும். இவ்வாறு 18 நாட்கள் குண்டம் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும்.

இத்திருவிழா கோவை மாவட்டத்தில் புகழ் மிக்க ஒரு திருவிழாவாக, பல்லாயிரக்கணக்கான மக்களை ஈர்க்கும்சிறந்த பெருந்திருவிழாவாக விளங்குகின்றது

## ஏனைய சிறப்புக்கள் :

அம்பிகையின் திருவுருவத்துக்கு நாலரை மீட்டர் நீளத்தில் புடவை சாத்துவதும், எலுமிச்சம் பழம் மாலை அணிவிப்பதும் மிகவும் விசேடமாகக் கருதப்படுகிறது.

தங்களுடைய பிரார்த்தனை நிறைவேறியதும் அம்மனுக்கு எண்ணெய் காப்பு சார்த்துதல், பிரார்த்தனை.

தங்கள் குறைகளை ''முறையீடு சீட்டில்'' எழுதி அம்மன் சந்நிதி முன்புறமுள்ள திரிசூலத்தில் கட்டினால் எண்ணிய காரியம் நிறைவேறும் என்பது நம்பிக்கை.

அன்னையின் அம்சமான திருக்கோயிலில் வந்து வழிபடும் பெண்களுக்கு அவர்களுக்கே உரிய சிரமங்களான வயிற்றுவலி, மாதாந்திரத் துன்பங்கள் போன்ற துயர்கள் தீர்வது சிறப்பு.

அம்பிகைக்கு வெள்ளை அரளி மாலையையும், சிவப்பு அரளி மாலையையும் அணிவிப்பது, சிறப்பு வழிபாடு ஆகும்.

இத்தகைய சிறப்பான கோயில் பொள்ளாச்சி யிலிருந்து தென்மேற்கில் 15 கி. மீ. தொலைவில் ஆனைமலையில், சேத்துமடை சாலையில் நுழைவு வாயில் கொண்டு, உப்பாற்றின் வடகரையில் அமைந்துள்ளது.

## ஏனைய கோயில்கள்:

அருள்மிகு சோமேசுவரர் கோயில், அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோயில் முதலியவை ஆகும். இவற்றில் சுமார் 20-க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளது. அத்திகோசத்தாரின் வாணிபக் கல்வெட்டும் கிடைத்துள்ளது. அத்தி

கோசத்தார் என்பவர் யானை வணிகர்கள் ஆவர். அவர்களின் கல்வெட்டுக் கிடைப்பதில் இருந்து இப் பகுதியில் இருந்த யானைகளை அவர்கள் பிடித்துப் பழக்கி பின்னர் விற்றிருக்கக்கூடும் என்ற கருத்து உண்மையாகிறது. இங்குள்ள பெருவழி வீரநாராயணப் பெருவழி என்று கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகிறது.

சோமேசுவரர் ஆல்யத்தில் உள்ள அம்பிகை "பெற்ற நாச்சியார்" என்ற பெயருடன் விளங்கு கிறாள். இதற்கு இரண்டு பொருள் கொள்ளலாம். நம்மையெல்லாம் "பெற்ற நாச்சியார்" என்று கொள்ளலாம். மற்றொன்று "பெற்றம்" என்றால் எருது. விடைமேல் அமர்ந்தனர் என்றும் கருதலாம். அருகில் உள்ள நெகமத்தில் அம்பிகை எருதுமேல் அமர்ந்த கோலத்தில் உள்ளதையும் இங்கே கருதலாம்.

இவ்வாறு வரலாற்றுச் சிறப்பும், புராணச் சிறப்பும் பெற்ற புண்ணிய பூமி ஆனைமலை.

**நிர்வாகம் :**

இத்திருக்கோயிலின் நிர்வாகம் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையால் நிர் வகிக்கப்படுகிறது. நிர்வாகத்தைக் கண்காணிக்க அறங்காவலர்கள் குழுவும், அரசு அலுவலரான செயல் அலுவலரும் உண்டு.

இதன் தற்போதைய ஆண்டு வருமானம் சுமார் 30 இலட்சம் ரூபாய் ஆகும்.

## தினசரி வழிபாட்டுக் காலங்கள்

காலை 6-00 மணி — சன்னதி திறப்பு

காலை 7-30 மணி — அபிசேக பூஜை அலங்காரம்

மதியம் 11-40 முதல் 12-30 — உச்சிகால பூஜை

மாலை 4-00 முதல் 4-30 — அபிசேக பூஜை

மாலை 6-30 முதல் 7-30 — சாயங்கால பூஜை

இரவு 8-00 மணி — சன்னதி திருகாப்பு

* * *

## வழிபாட்டுக் கட்டணங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அர்ச்சனை | — | ரூபாய் | 2—00 |
| 2. | தேங்காய் | — | ரூபாய் | 0—25 |
| 3. | முறையீடு | — | ரூபாய் | 5—00 |
| 4. | எண்ணெய் காப்பு | — | ரூபாய் | 10—00 |
| 5. | அபிசேகம் | — | ரூபாய் | 5—00 |
| 6. | உதிர மாலை | — | ரூபாய் | 2—50 |
| 7. | பால் அபிசேகம் | — | ரூபாய் | 2—00 |
| 8. | முடிகயிறு | — | ரூபாய் | 1—00 |
| 9. | தனி வழிக் கட்டணம் | — | ரூபாய் | 5—00 |
| 10. | சாத்துபடி கட்டணம் | — | ரூபாய் | 5—00 |

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்தசுடர் மணிப்பூண்
பஞ்சுக்கு நேர் பல துன்பங்களாம், இவள்
பார்வைக்கு நேர் பெருந்தீ
வஞ்சனையின்றிப்பலக யின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல்லாம்
தஞ்ச மென்றே உரைப்பீர்; சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்.

— மகாகவி பாரதி

ஓம்.

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைதொழு வார்க்கொரு தீங்கில்லையே

— அபிராமி அந்தாதி

செந்தில்—ஆனைமலை. ☎ 62005